1973 பிப்ரவரி 26]

திரு. ஜி. ஆர். எட்மண்ட் : குறைந்த பட்சம் 50,000 கிலோகிராம் மீன் கிடைத்தால் தான் இவைகளையெல்லாம் நடத்த முடியும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கூடுதலான சுறா மீன்கள் பிடிக்க, கடலில் ஏதாவது சர்வே நடக்கிறதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்பொழுது 50,000 கிலோ கிராம் கிடைக்கவேண்டியிருக்க, 14,000 கிலோகிராம் சுறா மீன்தான் கிடைக்கின்றன. அதிகமாக சுறா மீன்கள் பிடிக்க ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டு வருகின்றன. பெரிய சுறா மீன்கள் குறைந்த அளவில் கிடைக்கின்றன. அவைகளைச் சங்கிலி போட்டுப் பிடிக்க அதிகப் பணச் செலவு ஏற்படுகிறது. அவ்வளவு பணத்தைச் செலவழித்து லாபகரமாக எண்ணெய் தயாரிக்க முடியுமா என்றால், முடியாது. ஆகவே. எல்லாவற்றையும் பரிசீலனை செய்து பார்த்த பிறகு தான் அத்தகைய முறையை அரசாங்கம் கைவிட்டிருக்கிறது.

அரிசனக் குடியிருப்பு மனைக்கென கையகப்படுத்தப்பட்ட நிலம்.

*165 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1971–72-ல் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரிசனங்களுக்காக வீட்டு மனைகளை கையகப்படுத்துவதற்கென ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) அதில் செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(உ) கையகப்படுத்தப்பட்ட வீட்டு மனைகளின் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) 1971–72-ம் நிதி ஆண்டிற்கு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரிசனங்களுக்காக வீட்டு மனைகளைக் கையகப்படுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 1,50,000·00.

(இ) ரூ. 1,56,308·16.

(உ) இம் மாவட்டத்தில் 29 கிராமங்களில் 42·00 எக்கரா நிலம் கையகப்படுத்தப்பட்டு 512 வீட்டு மனைகள் வழங்கப்பட்டன.

இசையனூரில் சர்வோதய சங்கத்திற்கு நிலம் வழங்கல்.

*166 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆற்காடு ஒன்றியத்தில் உள்ள இசையனூர் என்ற ஊரில் உள்ள சர்வோதய சங்கத்திற்கு அரசு புறம்போக்கு நிலத்தை பட்டா செய்து கொடுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எத்தனை எக்கர் ?